1978 பிப்ரவரி 28] [மேலவைத் துணைத் தலைவர்]

15—3—1978 முதல் 25—3—1978 வரை கொள்கை விளக்கக் குறிப்புகள் விவாதிப்பதற்காகக் கூடும்.

15—3—1978 }
16—3—1978 } கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

17—3—1978 வேளாண்மை மற்றும் பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.

மேலவை வழக்கம்போல் காலை 10-30 மணி முதல் பகல் 1-30 மணிவரை கூடும்.

5. கவன ஈர்ப்பு.

அருப்புக்கோட்டை தொகுதியில் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் ராக்ஷஸ குழாய் கிணறுகள் அமைப்பதால் விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் குறையக்கூடிய அபாயத்தால் விவசாயிகள் ஈடுபட்டுள்ள மறியல் போராட்டம் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் சுமார் ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் ராக்ஷச குழாய் கிணறுகள் ஆறு இடங்களில் அமைத்து குழாய்கள் மூலம் வேறு தாலுகாவிலுள்ள யூனியன் பகுதிகளுக்கு குடி தண்ணீர் வசதி செய்ய திட்டமிட்டுள்ளதால், இந்தப் பகுதிகள் தங்கள் விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து, நாளடைவில் பஞ்சப் பகுதியாக மாறிவிடும் என அஞ்சி, விவசாயிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதைக் குறித்து"

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

கடலாடி, சாயல்குடி, மற்றுமுள்ள 82 கிராமங்களுக்கும் ரூ. 101 இலட்சங்கள் செலவில் குடிநீர் வழங்குவதற்கான ஓர் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு (Outline proposal) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது. குடிநீர் வழங்கப்பட வேண்டிய இடத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் ஓடும் வைகை நதியையும், கடலாடிக்கு

அருகே ஓடும் மலட்டார் நதியையும் நீர் ஆதாரமாக (Source) கொள்வது சாத்தியமில்லை என்பது விரிவான ஆய்விற்குப் பின்னர் புலனாகியது. ஆகவே அருப்புக்கோட்டை வட்டத்தில் இருக்கும் கீழ்குடி கிராமத்தில் இருந்து நீர் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்தில் மொத்தம் 2,475 யூனிட்டுகள் நிலத்தடி நீர் (Ground water) இருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது. இருக்கின்ற மொத்த நிலத்தடி நீர் 2,475 யூனிட்டுகளும் பயன் படுத்தப்படும் விதம் பின்வருமாறு :—

	யூனிட்டுகள்
பயன்படுத்தப்படும் மொத்த நீர் அளவு	1,500
நீர்பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நீரின் அளவு.	516
பயன்படுத்துவதற்காக எஞ்சியுள்ள நீரின் அளவு	459
ஆக மொத்தம்	2,475

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள குடிநீர் திட்டத்தின் இறுதி கட்டத்தில் ஆண்டு ஒன்றுக்குத் தேவைப்படும் நீரின் அளவு, நாளொன்றுக்கு 4 இலட்ச காலன்கள் விதம் கணக்கிட்டால் 45 யூனிட்டு களுக்கு சமமான நிலத்தடி நீரே ஆகும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார். இது எஞ்சியுள்ள மொத்த நிலத்தடி நீரின் அளவில் 10 சதவிகிதம் ஆகும். ஆதலால், இந்த அளவு நிலத்தடி நீரானது குடிநீர் வழங்கும் பணிக்காக ஒதுக்கப்படலாம். மேலும், ஆறு ஆழ்துளைக் கிணறுக்கும் சராசரி 60 மீட்டர்கள் அல்லது 200 அடி ஆழத்திற்குத்தான் தோண்டப்படும் என்றும் தெரிவித்துள்ளார். நிலத்தடி நீரின் அளவு ((Ground Water)) சராசரி 8 மீட்டர் அளவு நீர் மட்டம் இருந்தால், அத்தகைய இடங்களில் மேற்கூறிய ஆழத்திற்குத் தோண் டப்படும் துளைக் கிணற்றினால் அருகே உள்ள கிணற்று நீரில் நேரக்கூடிய ஊடுருவல் ஏறக்குறைய 100 மீட்டர் அளவுதான் இருக்கும். மேலும் இது நிலத்தடி நீரின் ஊற்றுத் தன்மையையும் பொறுத்ததாகும். இதைத் தவிர ஆழ்துளைக் கிணற்றில் நீர் இறைக்கும் அளவு நிமிடத்திற்கு 50 காலன்கள் விதமாகக் குறைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆழ்துளைக் கிணறு களுக்கு அருகே உள்ள கிணறுகளின் நீரில் ஊடுருவல் ஏதும் இருக்காது.

மேற்கூறிய நிலையினால், கடலாடி, சாயல்குடி மற்றும் இதர 82 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காகப் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் தோண்டப்படும் 6 ஆழ்துளைக் கிணறுகளினால், அருப்புக்கோட்டை வட்டத்தில் உள்ள விவசாயிகளின் நீர்ப் பாசன வசதிகள் பாதிக்கப்பட்டது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவரவர்களே, தங்கள் அனுமதியோடு, மாண்புமிகு அமைச்சரவர்களை இரண்டு வினாக்களுக்கு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே இதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பாதுகாப்பு தேவை. இப்போது நிரந்தரமான குடிநீர்த் திட்டம் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவில் செய்யப்படுகிறது. விவசாயிகள், விவசாயத்திற்காகத் தங்கள் கிணறுகளை விஸ்தரிக்கலாம். குடிநீர் வழங்கும் திட்டத்தால், அவர்கள் தங்கள் பாசன வசதியை விஸ்தரிக்க முடியாமல் போகிறது. அவர்களுக்கு எந்தவித பாதகமும் ஏற்படாதென்பதற்கு உத்தரவாதம் வேண்டும். ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, நிபுணர்களின் முடிவுப்படிதான் தொடர்ந்திருக்கிறார்களென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது குறித்து 90 விவசாயிகள் போராட்டம் நடத்தி, மறியல் செய்து, சிறைச் சாலைக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்குகள் எந்த நிலையில் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : நிறுத்தி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டது உண்மை. நிறுத்தி வைக்கப்படுமென்று கூறவில்லை. அதன் சார்பாக விவசாயப் பிரதிநிதிகள் என்னிடத்தில் வந்து பேசினார்கள். இரண்டு முறை கண்டார்கள். இந்தத் தண்ணீரைக் கொண்டு செல்வதால், விவசாயத்திற்குக் கொடுக்கக்கூடிய தண்ணீர் குறைந்து விடுமென்று அஞ்சினார்கள். ஆனால் அவர்கள் நிபுணர்களல்லர். நானும் நிபுணனல்ல, அதை அவர்களிடத்தில் சொல்லி, மீண்டும் 21 ஆம் தேதி வாருங்கள் ; நிபுணர்களுடன் கலந்து பேசி ஒரு முடிவெடுக்கலாமென்று சொன்னேன். அவர்கள் வரவில்லை என்று இரண்டு, மூன்று தினங்களுக்கு முன் சொன்னேன். அதையேதான் இப்போதும் சொல்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதன் காரணமாக 90 விவசாயிகள் மறியலில் ஈடுபட்டு, இப்போது சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அதுதான் மிக முக்கியமான பிரச்சினை. அவர்களை விடுதலை செய்து, வழக்கை அரசு வாபஸ் பெறுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைப்பற்றிய முடிவெடுக்க வேண்டிய அமைச்சர் தகுந்த முடிவெடுப்பார்கள்.

6. 1978-79 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பொதுவிவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : திரு. ஆ. பாலசுப்ரமணியம்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மேலவை துணைத் தலைவரவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை. . .

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் எழுந்தார்).

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவர் பேசட்டும். அவரை மாற்றுத் தலைவராக உட்காரவைத்துவிட்டு, உங்களைப் பேச அனுமதிக்கிறேன். அடுத்து நீங்கள் பேசலாம்.

* திரு. ஆ. பாலசுப்ரமணியம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1978-79 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்த விவாதத்திலே கலந்து கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள் கிறேன். நிதிநிலை அறிக்கையின் முதல் பக்கத்திலே, மிக அழகான வார்த்தை களாலே நிதியமைச்சரவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் இயற்கையின் கொடுமை, கடும் புயலாய், பெரும் வெள்ளமாய், தொடர் மழையாய் தமிழகத்தைத் தாக்கியது. இந்தத் தாக்குதலை உறுதியுடனும் துணிவுடனும் நாம் சமாளித்திருக்கிறோம்" என்று நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எங்கள் சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடும் மழைக்கும், கடும் புயலுக்கும் உள்ளான பகுதி 250 ஏக்கர்களாகும். கொல்லி மலையில் பெய்த பெரு மழையால் அந்த 250 ஏக்கர்களில் பெரு வெள்ளம் ஏற்பட்டு, கிணறு களும், நிலங்களும் மண்ணால் தூர்ந்துபோய்விட்டன. மின்சார மோட்டார்கள் தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டன. நெற் பயிர்கள் சேதமடைந்துவிட்டன. விவசாயிகளுக்கு உண்ண உணவில்லை. கால்நடைகளுக்குப் புல் இல்லை. அந்த அளவுக்கு மண் மேடிட்டுவிட்டது. இது குறித்து மாண்புமிகு முதலமைச் சரவர்களுக்குத் தந்தி அனுப்பினேன். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். இதற்கு முன்பு ஒரு மாபு இருந்தது. சட்ட மேலவை, பேரவை உறுப்பினர்கள் ஒரு அவசரப் பிரச்சினை குறித்து தமிழக முதல்வருக்கோ, பிற அமைச்சர்களுக்கோ தந்தி கொடுத்தால், ஒரு